ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 9 நவம்பர் 2003 கானம் : 4

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 96 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 4 |
| 4. | வேத கதைகள் - 77 | 6 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 67 | 8 |
| 6. | பாலகர்களுக்கு ஒரு கதை -71 | 12 |
| 7. | மாலே மணிவண்ணா - 14 | 13 |
| 8. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 18 | 17 |
| 9. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 98 | 22 |
| 10. | பக்தர்களின் கவனத்திற்கு ! | 30 |


தன்னைப் பார்த்ததும் வெட்கமுண்டாக, கைகுவித்து நிற்கும் ராதையையும், கண்ணனையும் கண்டு சிவனும் கைகுவித்துப் பேசினார்.

त्रिलोचनत्वं मम चिन्तयित्वा पुरा सभायामपि लज्जितोऽहम् ।
ईर्ष्यां भजाम्यत्र सहस्रनेत्रे दृष्ट्वा पुरस्ताद्युवयोस्तु लीलाम् ॥

முன்பெல்லாம் என்னை ஸபையில் முக்கண்ணன் என்றால் வெட்கமாக இருக்கும். இப்போது உங்கள் இருவர் லீலையைப் பார்த்தால் ஸஹஸ்ரநேத்ரனான இந்திரனைக் கண்டு பொறாமைப்படுகிறேன்.

- **ஸ்ரீ ராதிகா விலாஸ சம்புகாவ்யம்**

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : காம்போதி தாளம் : த்ரிபுட

*பல்லவி*

***ராஜாதி ராஜ கம்பீர***
***பாதாதி கேஶ ஸர்வாங்க ஸுந்தர (ராஜாதி)***

*சரணங்கள்*

***ஶேஷகிரிவாஸ அஶேஷ பாபஹர***
***விஶேஷகருணா கடாக்ஷ ப்ரஸீத***
***சரணாகத பாலன ஸமானரஹித***
***சங்கசக்ரதர திவ்ய விக்ரஹ (ராஜாதி)***

***பவ்ய குணாலய பவதுக்கஹர***
***திவ்ய ஞான ஸுலபதாயக***
***நவநவ நூதன லீலாவைபவ***
***நவவித பக்திப்ரிய முரளீதர (ராஜாதி)***

---

சிலர், ‘‘நாங்கள் இறைவனிடம் சரணாகதி செய்தாயிற்று’’ என்கின்றார்கள்; அல்லது, ‘‘நாங்கள் குருவிடம் சரணாகதி அடைந்து விட்டோம்’’ என்கின்றார்கள். விதிப்படி வாழ்க்கையில் நடப்பதை எல்லாம் மகிழ்ச்சியுடன் எந்த கேள்வியும் கேட்காமல், பரிகாரமும் தேடாமல் ஏற்றுக்கொள்பவர்களே உண்மையாக சரணாகதி அடைந்தவர்கள். அவர்களுக்கு தெய்வத்தை உணர்வது அல்லது ஆத்மாவை உணர்வது போன்றவற்றிலும்கூட எந்த முயற்சியும் இருக்காது. இருந்தபோதிலும் அது தானாக நடந்துவிடும்!

**- ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி**

நம் ஸ்வாமிஜி ஸாதாரணமாகப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது ஏதாவது ஒரு ஸத்ஸங்கத்தின் அன்பர் பெயரைச் சொல்லி, ''எங்கே அவரை வெகுநாட்களாக வரக்காணோம்? என்ன காரணமோ? தெரியவில்லையே!'' என்று கூறுவார். ஆச்சரியமாக, சிறிது நேரத்திலேயே அவரிடமிருந்து டெலிபோன் அழைப்பு வரும். அல்லது ஓரிரு நாட்களில் அவர் ஸத்ஸங்கத்திற்கு வருவார். எங்களுக்கு இது பெரிய ஆச்சரியமாக இருக்காது. காரணம், நாங்கள் அப்படி நினைப்பதே கூட பல சமயங்களில் நடந்துவிடும். அப்படியிருக்கையில், ஸ்ரீ ஸ்வாமிஜி விஷயத்தில் நடப்பதில் ஆச்சர்யம் என்ன இருக்கின்றது? என்று தோன்றும்.

ஸ்ரீ ஸ்வாமிஜி பிரேமிகபவனத்தில் இல்லாதபொழுது, பிரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளின் பூஜையை கிரி தான் பார்த்துக்கொள்வார். ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளின் பிரதிஷ்டை பிரேம பிரதிஷ்டைதான். பூஜைகளும் பிரேம பூஜைதான். இரவில் டோலோத்ஸவ கீர்த்தனங்கள் பாடி பகவானுக்கு பால் ஸமர்ப்பிக்கப்படும். வழக்கமாக இதை சிரத்தையாக செய்து வரும் கிரிக்கு, ஒருநாள் மனத்திலே ஏதோ சஞ்சலம். வருத்தத்துடன் இருந்ததால், ''இன்று கீர்த்தனங்கள் எதுவும் பாடாமல் டோலோத்ஸவம் செய்துவிடலாம்'' என்று நினைத்து ஸன்னதிக்குள் செல்ல ஆரம்பிக்கும் நேரத்தில் டெலிபோன் மணி அடிக்கின்றது. ஸ்ரீ ஸ்வாமிஜிதான் பேசினார். முதல் கேள்வியே, 'டோலோத்ஸவம் ஆகிவிட்டதா?' என்பதுதான். 'யார் பாடுவதற்கு இருக்கிறார்கள்? கீர்த்தனங்கள் பாடாமல் டோலோத்ஸவம் பண்ணாதே!' என்று ஸ்ரீ ஸ்வாமிஜி கூறியவுடன் கிரிக்கு ஆச்சர்யமாக ஆகிவிட்டது. இதுபோல் எத்தனையோ ஸம்பவங்கள் நடந்துள்ளன. இது நடந்து பலநாட்கள் இருக்கும். இப்பொழுது ஞாபகத்திற்கு வந்ததால் எழுதினேன். (தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : மஹான்களுடைய அருளிச் செயல்களான பிரபந்தங்கள், தேவாரம், கீர்த்தனைகள் இவைகளைப் பாடி இறைவனை வழிபடுவது என்பது அதிகப் பலனைத் தரும் என்று தாங்கள் அடிக்கடி கூறுகின்றீர்கள். அதுபோல், மஹான்களுடைய கிரந்தங்களைப் பாராயணம் செய்வது விசேஷம் என்று கூறுகின்றீர்கள். இதற்கு என்ன காரணம்?*

பதில் : சிலருக்கு பாடல்கள் எழுத வேண்டும், அல்லது நாம் ஏதாவது நூல் எழுத வேண்டும் என்று ஆசை வரும். அதனால், அவர்கள் இறைவனைப் பற்றிப் பாடவோ, எழுதவோ ஆரம்பிப்பார்கள். ஆனால், மஹான்களுக்கு இறைவனுடைய குணங்களையும், ரூபத்தையும், கருணையையும் வர்ணிக்கவேண்டும் என்று ஆசை! ஆகவேதான் அவர்கள் பல பாடல்கள் பாடியுள்ளார்கள். பல நூல்களை எழுதியுள்ளார்கள். மேலும், மஹான்கள் தாங்கள் செய்யும் நூல்களிலும், பாடல்களிலும் தங்களுடைய தபோசக்தியை வைத்திருப்பதனால் அதைப் பாடுபவர்களும், படிப்பவர்களும் பலவித நன்மைகளை அடைகிறார்கள்.

*கேள்வி : நான் மந்திர ஜபம் செய்து வருகின்றேன். எனக்குத் தெரிந்தவர் ஒருவர் ந்யாஸங்கள் செய்துகொண்டுதான் மந்திர ஜபம் செய்ய வேண்டும் என்று கூறுகின்றார். ந்யாஸங்கள் அவசியமா? நீங்கள் எனக்கு அப்படிச் செய்ய வேண்டும் என்று சொல்லவில்லையே?*

பதில் : ஏதாவது உலக விஷயமான பலனை எதிர்பார்த்து செய்யக்கூடிய ஜபங்களுக்குத்தான் ந்யாஸங்கள் தேவை. முக்தியை உத்தேசித்தும், பகவானுடைய தரிசனத்திற்கும் ஆசைப்பட்டு செய்யக்கூடிய ஜபங்களுக்கு ந்யாஸம் தேவையில்லை.

*கேள்வி : நான் மௌன விரதம் அடிக்கடி இருந்து வருகின்றேன். இது நல்லதா? எந்த நாட்களில் மௌனம் இருந்தால் நல்லது?*

பதில் : இயற்கையிலேயே யார் அதிகமாக, 'வளவள', என்று பேசிக் கொண்டிருக்கின்றார்களோ அவர்களுடைய மனது ஒருமுகப்படாது. மௌன விரதம் மனதை ஒருமுகப்படுத்தும். மனோசக்தியை அதிகரிக்கும். ஸரஸ்வதிக்கு உகந்த நாளான 'மூல' நக்ஷத்திரத்தன்று மௌன விரதம் இருப்பது சாலச் சிறந்தது ஆகும்.

*கேள்வி : மஹான்கள் சில சமயங்களில் சாஸ்திரத்தை மீறி கார்யம் செய்கின்றார்களே?*

பதில் : வ்யக்தி விசேஷத்தினால், அதாவது பண்ணக்கூடியவர் தபஸ்வியாகவோ அவதார புருஷராகவோ இருந்தால், சாஸ்திர விரோதமாக இருந்தாலும், அந்த கார்யம் தெய்வத்தால் ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால், அதைப் பார்த்து சாதாரண மனிதர்கள் அதை ஒரு வழிமுறையாக எடுத்துக்கொள்ளக்கூடாது. உதாரணமாக, ராமர் ஜடாயுவிற்கு மனிதர்களுக்கு செய்வது போல் ஈமக்கிரியைகளை செய்ததும், துறவியாக இருந்த போதிலும் ஆதிசங்கரர் தாயாருக்கு கிரியைகள் செய்ததும் இதில் அடக்கம்.

---

ஒரு வீட்டுக்காரன் தன்னுடைய வீட்டுத் தோட்டத்தை அழகாக கொத்தி, பூச்செடிகளை பயிரிட்டு, அதை நந்தவனமாக்குவதற்கு அவனே உழைக்கின்றான். அப்படி உழைக்கும் அவனுக்கு, 'இது நந்தவனமாக வேண்டும், பூத்துக் குலுங்க வேண்டும்' என்ற ஒரே எண்ணம்தான் இருக்கும். ஆனால், அதே வேலையை ஒரு ஆளை பணிக்கு அமர்த்தி செய்வானாகில் அந்த வேலைக்காரனுக்கு, 'இந்தத் தோட்டம் எப்பொழுது பூத்துக் குலுங்கி நந்தவனமாகும்?' என்பதையெல்லாம்விட, 'இந்த வேலை எப்பொழுது சீக்கிரம் முடியும்? முடிந்தவுடன் நமக்கு என்ன கூலி கிடைக்கும், அல்லது கிடைக்காமலேயே போய்விடுமா?' என்ற எண்ணம்தான் மேலோங்கியிருக்கும். இதுபோல்தான் இறைவனுக்காக பக்தி செய்பவர்களுடைய மனது அவனுடைய தரிசனம் ஒன்றையே நினைத்து ஏங்கும். ஆனால், உலக சுகங்களை நினைத்து இறைவனிடம் பக்தி செய்பவனுடைய மனது 'இதனால் நமக்கு என்ன லாபம் வரும்?' என்பதிலேயே குறியாக இருக்கும். **—ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி**

# வேத கதைகள் -75

– தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

ஆரோஹர், ப்ராஜர், படரர், பதங்கர், ஸ்வர்ணரர், ஜோதிஷிமான், விபாஸர் என்று ஏழு சூரியர்கள். அந்த எழுவரும் இந்த உலக நன்மைக்காக ஆகாயத்தில் இருந்துகொண்டு எங்கும் வெளிச்சத்தை அளிக்கின்றனர். இவர்கள் மழை வாயிலாக பால் முதலிய சுவையான பொருள்களை சேகரிக்கின்றனர். ஒருபொழுதும் ஜனங்களுக்கு கெடுதலை செய்யாதவர்கள். நன்மையையே செய்பவர்கள். இந்த ஏழு சூரியர்களைக் காட்டிலும் கஸ்யபர் என்ற 8-வது சூரியன் இருக்கிறார். அவர் மேருமலையை ஒருபொழுதும் விடுவதில்லை. எப்பொழுதும் மேருமலையையே பிரகாசப்படுத்துகிறார்.

முன் கூறிய ஏழு சூரியர்களும் இந்த கஸ்யபர் என்ற சூரியனிடம் இருந்து ஒளியைப் பெறுகின்றனர். இந்த ஏழு சூரியர்களும் ஒளி உள்ளவர்கள்தாம். ஆனாலும், அதிகமான ஒளியை இந்த கஸ்யபரிடம் இருந்தே பெறுகின்றனர். சந்திரன்தான் இந்த ஏழு சூரியர்களையும் கஸ்யபர் சமீபத்தை அடைய உதவி செய்கிறான். எப்படி பொற்கொல்லன் துருத்தியினால் காற்றை ஏற்படுத்தி அக்னியை ஜொலிக்கச் செய்து, அக்னியில் போடப்பட்ட தங்கத்திற்கு அதிக ஒளியை ஏற்படுத்துகிறானோ அதேபோல் இந்த கஸ்யபர் ஏழு சூரியர்களுக்கும் அதிக ஒளியை அளிக்கிறார். பஞ்சகர்ணர் என்ற வத்ஸருடைய பிள்ளை இந்த ஏழு சூரியர்களையும் நேரில் கண்டதாகக் கூறுகிறார். அதே போல ப்ளச்சர் என்றவருடைய பிள்ளை ஸப்தகர்ணர் என்பவரும் தானும் கண்டதாகக் கூறுகிறார்.

மனிதர்களால் நெருங்கி இருக்கிற ஆரோஹர் சூரியன்தான் நம்மால் பார்க்கப்படுகிறான். மற்ற 6 சூரியர்களை பார்க்க முடிவதில்லை. எழுவர்களையும், இந்த 2 முனிவர்கள்தான் பார்க்கிறார்கள். 8-வது ஆன கஸ்யபர் என்ற சூரியனை காதால் மட்டும் கேட்டு இருக்கிறார்கள். ஆக, இந்த இருவர்களால் கூட கஸ்யபரை காண

முடிவதில்லை. கஸ்யபர் மேருமலையை ஒருபொழுதும் விடாது, அங்கேயே இருப்பதால் பார்க்க முடிவதில்லை. மேருமலைக்குப் போகவும் முடியவில்லை என்ற காரணத்தையும் விளக்கினார்கள்.

கர்க்கருடைய பிள்ளை ப்ராணத்ராதர் என்ற முனிவர் பஞ்சகர்ண, ஸப்தகர்ண என்ற இரு முனிவர்களைப் பார்த்து பின்வருமாறு கூறினார். மேரு மலையிலேயே விளங்குகிற கஸ்யபர் என்ற சூரிய மண்டலத்தை நான் நேரில் பார்த்து இருக்கிறேன். தகுதியான வழியில் நீங்கள் செல்லுங்கள். அவ்வாறு சென்றால், மேரு மலையிலேயே எப்பொழுதும் இருக்கிற கஸ்யபரையும் அடையுங்கள் என்று கூறினார். தற்சமயம் நமக்கு ஒளியை அளிப்பவர் ஆரோஹர் என்ற சூரியன். அதை நாம் காண்கிறோம்.

ப்ராஜர் முதலிய மூவர் மேரு மலைக்கு கீழ்ப்பிரதேசத்தில் இருந்து கொண்டு கீழ் நோக்கிய தங்களுடைய கிரணங்களால் மேருமலைக்கு கீழே உள்ள பிராணிகளை பிரகாசப்படுத்துகின்றனர். இதனால்தான் இந்த மூவரின் கிரணங்கள் கீழ் நோக்கி வந்து நமக்கு தாபத்தை ஏற்படுத்துகின்றது. மற்ற ஸ்வர்ணரர் முதலிய 3 சூரியர்கள் மேரு மலைக்கு மேல் பகுதியில் இருக்கின்றனர். இதனால் இந்த மூவரின் கிரணங்கள் மேல் நோக்கிச் செல்கின்றன. கீழே இருப்பவர்களுக்கு தாபம் ஏற்படுவது இல்லை.

ப்ராஜர் முதலானவர்களுக்கு கீழ் நோக்கிய கிரணங்கள் இருப்பதாலும், ஸ்வரணர் முதலியவர்களுக்கு மேல் நோக்கிய கிரணங்கள் இருப்பதாலும் நடுவில் தாபம் இருக்காது. ஆதலால், இந்த இடை வழியாகச் சென்றால், கஸ்யபரைப் பார்க்கலாம். இந்த மூவரின் கிரணங்கள் மேல் நோக்கிச் செல்லுகின்றன என்பதை விளக்கினோம். இந்த விபரத்தை மகாகவியான காளிதாசன் ''குமாரசம்பவத்தில்'' முதல் சர்க்கத்தில்

*''பராபோதஸதி ஊர்த்வ முகைஹி, மயூகைஹி*

என்ற ஸ்லோகத்தில் விளக்குகிறார்.

மேரு மலைக்கு மேல் உள்ள ஆகாச கங்கையில் உள்ள தாமரைகள் சூரியனின் மேல் நோக்கிய கிரணங்களால் மலருகின்றன என்று கூறியிருக்கிறார்.

# எந்தரோ மஹானுபாவுலு - 67

மஹாப்ரபுவிடம், சிலர் இப்படி ஜனங்களைக் கிளப்பிவிட்டு காஜியிடம் முரட்டுத்தனமாக நடக்கத் தூண்டிவிட்டுள்ளார்கள் எனத் தெரிவித்ததும் அவர் நாமஸங்கீர்த்தனத்தை நிறுத்துமாறு பணித்தார். உடனே சட்டென்று வாத்யங்கள் கீழே வைக்கப்பட்டு நாமஸங்கீர்த்தனம் நின்று அமைதி நிலவியது. நடனம் நின்றது. ப்ரபு அவர்களிடம், 'நினைவிருக்கட்டும்! காஜிக்கு ஏதேனும் தீங்கு இழைத்தால் அது எனக்குச் செய்த அபராதமாகும்! ஜாக்கிரதை!' என்று கர்ஜித்தார். ப்ரபு இப்படிக் கூறியதைக் கேட்டதும் ஜனங்கள் கையிலிருந்த கல், செடி, கொடிகளைக் கீழே போட்டுவிட்டு சாந்தமாக நின்றனர். காஜியின் பணியாட்களிடம் ''நான் வந்திருக்கிறேன் எனக்கூறி காஜியை அழைத்து வாருங்கள். அவருக்கு ஒருவித அசம்பாவிதமும் நேராது என உறுதி கூறுங்கள்'' எனக் கூறினார்.

ப்ரபுவின் உத்தரவாதத்தைக் கேட்டதும் காஜி மெதுவாக வெளியில் வந்தான். ப்ரபு, பக்தர்களுடன் காஜிக்கு வணக்கம் தெரிவித்து அவனை அழைத்து தன் பக்கத்தில் அமர்த்திக் கொண்டார். அன்புடன் சிரித்துக்கொண்டே, ''நாங்கள் எல்லோரும் உங்கள் அதிதிகளாக வந்துள்ளோம். நீங்கள் இப்படி உள்ளே ஒளிந்து கொள்வது எந்த ரீதியில் சரியாகும்'' எனக்கேட்டார்.

காஜி வெட்கத்துடன், ''எனது சௌபாக்யம் நீங்கள் வீட்டிற்கு வந்துள்ளீர்கள். நீங்கள் கோபத்தில் இருக்கிறீர்கள் என நினைத்து அந்த நிலையில் உங்கள் முன்பு வரத் தயங்கியவாறு உள்ளே இருந்தேன்'' என்றான்.

ப்ரபு சிரித்துக்கொண்டு, ''நீங்கள் இங்கு அரசாள்பவர். உங்களிடம் கோபித்துக்கொள்ள என்ன விஷயமிருக்கிறது'' என்றார். சசிதேவியின் தகப்பனாரான நீலாம்பர சக்கரவர்த்தி இந்த பேல்புக்ரியா கிராமத்தைச் சேர்ந்தவர். அவருக்கு காஜியிடம் ஸ்னேகம் உண்டு. எனவே காஜி, ''நிமாயி! கிராமத்தின் தொடர்பால் உன் தாத்தா எனக்கு சிற்றப்பா முறை. நீ எனக்கு மருமான். நான் உனக்கு மாமா. மருமான் காரணமின்றி கோபித்துக்கொண்டாலும்

மாமா பொறுத்துக்கொள்ள வேண்டியதுதான் முறை. நீ எத்தனை வேண்டுமானாலும் கோபித்துக்கொள்'' என்றான்.

ப்ரபு மறுபடி சிரித்தார். பிறகு, ''மாமா! நான் இந்த உறவை மறுக்கவில்லையே! நீங்கள் என்னைவிட எவ்வளவு வயதில் பெரியவர். என்னைத் தோளில் போட்டு வளர்த்துள்ளீர்கள். நான் உங்கள் குழந்தை. உங்களிடம் எனக்கென்ன கோபம்?'' என்றார்.

காஜி வெட்கத்துடன், ''இல்லை. நான் நாமஸங்கீர்த்தனத்தை விரோதித்தேன் அல்லவா! அதனால் உனக்கு கோபம் இருக்கலாம்'' எனக்கூற, ப்ரபு, ''இதில் கோபிக்க என்ன இருக்கிறது? நீங்களும் ஸ்வதந்திரர் இல்லையே! பாதுஷா என்ன ஆணையிடுகிறாரோ அதற்குக் கீழ்ப்படிய வேண்டியவர்தானே! நீங்கள் நாமகீர்த்தனம் செய்பவர்களுக்கு தண்டனை தரவேண்டும் என நிச்சயித்தீர்களானால் நாங்கள் எல்லோருமே அபராதிகள்தான். சந்தோஷமாக எங்களை தண்டியுங்கள். ஏற்றுக்கொள்கிறோம்'' என்றார்.

காஜி பிரபுவிடம், ''பாதுஷா ஒன்றும் அப்படியெல்லாம் ஆணையிடவில்லை. உங்களுக்குள்ளேயே சில பண்டிதர்கள் நீங்கள் சாஸ்திரத்திற்குப் புறம்பாக ரஹஸ்யமாக பகவன் நாமங்களை உரக்கக் கூவிக்கொண்டு திரிகிறீர்கள். அனைத்து வர்ணத்தாருக்கும் உபதேசம் தருகிறீர்கள். அதனால் துர்பிக்ஷம் வரும் என என்னிடம் முறையிட்டதால்தான் நான் நாமகீர்த்தனத்துக்கு விரோதமாக ஆணையிட்டேன்'' என்றான்.

''அப்படியா! நீங்கள் நாமஸங்கீர்த்தனத்தை ஏன் தடை செய்யவில்லை'' என ப்ரபு கேட்க, காஜி சிறிது நேரம் மௌனம் சாதித்துவிட்டு, பிறகு, ''நீ தனியாக வா; உன்னிடம் பேசுகிறேன்'' என்றான். ப்ரபு, ''இங்கு இருப்பவர்கள் என்னுடைய அந்தரங்க பக்தர்கள். இவர்களிடம் என்ன சங்கோஜம்! என்ன விஷயம் என்று இங்கேயே சொல்லலாம்'' என்று கூறினார்.

''கௌர்ஹரி! பக்தர்கள் கூறுவதுபோல் நீ சாக்ஷாத் ஹரிதான். சில முகம்மதியர்கள் நீ 'க்ருஷ்ண க்ருஷ்ண' எனக்கூறி மக்களைக் கெடுக்கிறாய் என என்னிடம் குறை கூறினர். இதனால் நான் வேறுவழியின்றி நாமஸங்கீர்த்தனம் நடக்கும் வீட்டிற்குள் புகுந்து அன்று ம்ருதங்கத்தை உடைத்து ரகளை செய்தேன்.

நாமஸங்கீர்த்தனத்திற்கு விரோதமாக ஆணையிட்டேன். ஆனால், அன்று இரவே நான் ஒரு பயங்கரமான கனவு கண்டேன். ஒரு பெரிய சிங்கம் என்னிடம் வந்து, ''நாமஸங்கீர்த்தனத்தை எதிர்த்தால் ம்ருதங்கத்தை நீ கிழித்தது போல் நான் உன் வயிற்றைக் கிழித்துப் போட்டுவிடுவேன்'' என்று கூறி என்னை அச்சுறுத்தியது. இப்படிக்கூறி தனது கூரிய நகங்களை என் வயிற்றில் வைத்து என்னைத் தாக்க ஆரம்பித்தது. இதற்குள் நான் விழித்துக் கொண்டேன். என் தேகத்தில் அந்த நகத்தின் சின்னங்கள் இன்னும் ப்ரத்யக்ஷமாக இருக்கிறது பார்'' எனக் கூறி தன் சரீரத்தைக் காண்பித்தான்.

காஜியின் பேச்சைக் கேட்டு ப்ரபு, அவரை வேகமாக ஆலிங்கனம் செய்துகொண்டு, ''மாமா! நீங்கள் பரம வைஷ்ணவராகி விட்டீர்கள். எங்களது சாஸ்திரப்படி எந்த விதத்திலாவது, கேலியாகவோ, துக்கத்திலோ அல்லது சங்கேதமாகவோ - பகவானின் நாமத்தை உச்சரித்தால் போதும். ஒருவனது பாபங்கள் ஸம்பூர்ணமாக நஷ்டமாகிவிடும். நீங்கள் ஹரி என்றும் க்ருஷ்ண என்றும் மதுரமதுர நாமாக்களை உச்சரித்து நிர்மலமான புத்தியைப் பெற்றுள்ளீர்கள்'' என்றார்.

ப்ரபுவின் ஆலிங்கனத்தால் காஜியின் சரீரத்திலுள்ள ஒவ்வொரு ரோமமும் குத்திட்டு நின்றது. உடலில் ஒரு புதிய வேகம் சஞ்சாரம் செய்ய ஆரம்பித்தது. உடனே ப்ரபு, ''சரி மாமா! நீங்கள் இனி எங்கள் நாமஸங்கீர்த்தனத்துக்கு விரோதம் செய்யாமல் இருங்கள்'' என்றார்.

கத்கதமான குரலில் காஜி, ''கௌர்ஹரி! நீ சாக்ஷாத் நாராயணஸ்வரூபம்! உன் முன்பு நான் சபதம் செய்து கூறுகிறேன் நான் என் குலத்தை விட்டாலும் விடுவேன். குடும்பத்தை விட்டாலும் விடுவேன். ஆனால், இனி ஒருபோதும் நாமஸங்கீர்த்தனம் செய்பவர்களுக்கு தடை சொல்ல மாட்டேன்! உன் ஜனங்களிடம் பயமின்றி நாமஸங்கீர்த்தனம் செய்யுமாறு கூறிவிடு'' என்றான்.

அனைவரும் ஆனந்தக் கூத்தாடினார். 'ஹரிபோல்', 'ஹரிபோல்' கோஷம் ஆகாயத்தைப் பிளக்க ப்ரபு மறுபடி காஜியை இறுக்கத் தழுவிக்கொண்டு பக்தர்களுடன் நாமசங்கீர்த்தனம் செய்துகொண்டு முன்னேறினார். காஜியும் அவரைப் பின்தொடர்ந்து சென்றார்.

சிறிதுதூரம் சென்றதும் ப்ரபு, காஜியை தனது இருப்பிடத்திற்கு திரும்பிச் செல்லுமாறு கூற, காஜி அவரைப்பணிந்துவிட்டுத் திரும்பினார். அன்றிலிருந்து அவர் மட்டுமில்லை. அவரது வம்சமே நாமகீர்த்தனத்துக்கு ஒத்துழைக்க ஆரம்பித்தனர். இன்றுவரை சாந்த்கான் காஜி வம்சத்தினர் க்ருஷ்ண கீர்த்தனம் செய்ய உதவி வருகின்றனர். சாந்த்கான் காஜியின் ஸமாதிக்கு இன்றும் வைஷ்ணவ பக்தர்கள் மரியாதை செலுத்தி வருகிறார்கள். விரோதியைக் கூட ப்ரேமையால் வசீகரித்து தனது அன்புக்குடையின் கீழ்க் கொணர்ந்த ப்ரபுவின் கருணைக்கும், மாமா என அழைக்கப்பட்டு ப்ரபுவின் ஆலிங்கனம் பெற்ற சாந்த்தான் காஜிக்கும் நம் வந்தனங்கள்!

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

ஸ்ரீ ஹரி:

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

மதுரமுரளி தெய்வீக மாத இதழ் ஆரம்பித்து எட்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. சந்தாதாரர்கள் மதுரமுரளிக்கான சந்தாவை உடனே அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மதுரமுரளி மாத இதழுக்கான தங்களுடைய சந்தா எண் இந்த மாத மதுரமுரளி envelop மீது ஒட்டப்பட்டுள்ள address labelல் இரண்டாம் வரியில் உள்ளது. உதாரணத்திற்கு ஒரு சந்தா எண்ணைப் பார்ப்போம்.

சந்தா எண் : 2003061234

10 எண்கள் கொண்ட இந்த சந்தா எண்ணில் முதல் 4 எண்கள் சந்தா முடிவடையும் வருடத்தையும் அடுத்த 2 எண்கள் சந்தா முடிவடையும் மாதத்தையும் கடைசீ 4 எண்கள் சந்தா எண்ணையும் குறிக்கும். அதாவது 200306 என்பது ஜூன் 2003 உடன் சந்தா முடிவடைந்து உள்ளது என்பதாகும். அவர்கள் உடனே சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவேண்டும். கடைசீ 4 எண்கள் ''1234'' என்பது அவருடைய சந்தா எண். இதே போல் அவரவர்களுக்கான சந்தா எண்ணை குறித்துக்கொள்ளவும். மதுரமுரளிக்கான சந்தா அனுப்பும்பொழுதும், முகவரி மாற்றம் செய்யும்பொழுதும் சந்தா எண்ணை கட்டாயம் எழுதி அனுப்ப வேண்டும்.

## பாலகர்களுக்கு ஒரு கதை - 71

ஆந்திர தேசத்திலே வெகு காலத்திற்கு முன்பு ஒரு வியாபாரி இருந்து வந்தார். நியாயமான வட்டிக்கு எல்லோருக்கும் பணம் கொடுத்து உதவுவது அவருடைய வியாபாரம். அவருக்கு திருப்பதி ஸ்ரீநிவாஸபெருமாள் மீது அளவுகடந்த பக்தி. எப்பொழுதெல்லாம் நேரம் கிடைக்கின்றதோ, அப்பொழுதெல்லாம் திருப்பதிக்குச் சென்று ஸ்ரீ ஸ்ரீநிவாஸபெருமாளை தரிசனம் செய்து வருவார்.

அவர் பணத்தை யாருக்கு கொடுக்கும்பொழுதும், இவ்வளவு ரூபாய் அவருக்கு கொடுத்ததாக எழுதி வாங்கிக்கொள்ளமாட்டார். ''நான் உனக்கு திருப்பதி ஸ்ரீ ஸ்ரீநிவாஸபெருமாள் சாக்ஷியாக பணம் கொடுக்கின்றேன்'' என்று மட்டுமே கூறுவார். அதுபோல் யாரிடமிருந்தாவது பணத்தைத் திரும்ப வாங்கினால் திருப்பதி ஸ்ரீநிவாஸபெருமாள் சாக்ஷியாக திரும்ப வாங்கிக்கொண்டேன் என்று வாயினால் மட்டும் கூறுவார். இப்படியாக, அவருடைய வியாபாரம் நல்லபடியாகச் சென்று கொண்டிருந்தது.

ஒரு ஸமயம், அவரிடம் பணம் வாங்கிய ஒருவர் திருப்பித் தரவில்லை. இவர் எவ்வளவு முறை கேட்டும் எந்தப் பயனும் இல்லை. நீதிமன்றத்திலே வழக்கு பதிவு செய்தார். வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி, ''நீங்கள் பணம் கொடுத்ததற்கு யார் சாட்சி?'' என்று வியாபாரியைப் பார்த்துக் கேட்டார். வியாபாரியோ ''திருப்பதி ஸ்ரீநிவாஸனே சாட்சி!'' என்று கூறினார். அப்படியானால் திருப்பதி ஸ்ரீநிவாஸன் உங்களுக்காக இங்கு வந்து சாட்சி சொல்வாரா?'' என்று கேட்க, எல்லோரும் அதிசயிக்கும் வகையிலே ஸ்ரீ ஸ்ரீநிவாஸபெருமாளே நீதிமன்றத்தில் ஒரு கணம் தோன்றி, ஆம் ''வியாபாரி பணம் கொடுத்ததற்கு நானே சாட்சி'' என்று சாட்சி அளித்தார்.

நீதிபதி உட்பட எல்லோரும் இதைக் கண்டு அதிசயித்தனர். வியாபாரியின் பக்கமே தீர்ப்பும் ஆனதைக் கேட்கவும் வேண்டுமா? இறைவனிடம் நம்பிக்கையோடு பக்தி செய்தால் இறைவன் தன்னை நம்பியவர்களை ஒருகாலும் கைவிட மாட்டான்.

# மாலே மணிவண்ணா - 14

சிவந்த வாயை உடைய கருடக் கொடியை உடைய பெருமானே! வேதத்துள் சொல்லப்படுகின்ற வேள்வி முதல்வனாகிய யக்ஞ கர்த்தாவின் உரை நின் உருவமாகும். வேள்விக்கிறைவன் 'ஆசான்' எனப்படுவான். அவன் உரை மந்திரத்தால் நிறுவப்பெற்றது. அதுவே, கடவுளுக்கு உரு என்பது ஜைமினியால் செய்யப்பட்ட பூர்வமீமாம்சை என்ற வைதீக நூல் கருத்து. ஆதலால் அம்மந்திரச் சொல்லே எம்பெருமானது வடிவம் என்றார்.

படி முறையாக ஒன்றற்கொன்று உயர்ந்த வேறுபட்ட யாகங்களுள் வேள்வித்துணையாய் நின்று பசுவைப் பற்றிக் கொள்கின்றவன் மாயோனாகிய நீயே! யூபமாய் நின்று ஆன்ம அறிவை உண்டு உன்னுடைய குணத்தைப் பிரகாசிக்கச் செய்கின்றாய் ஆதலின் அதுவே உனக்கு உணவாகிறது. ஒருவரால் செய்யப்படாததும், தானே தோன்றியதும் ஆகச்சொல்லப்படுகின்ற உலகத்துச் சொல்லல்லாத வேத வாக்கியங்களாலே ஆகிய மந்திரங்களால் எரியை முறையாகக் கடைந்து அந்தச் சிறந்த ஒளிப்பெருக்கத்தை உண்டாக்கிக்கொள்வர் அந்தணர்.

இது கடவுள் இல்லை என்பாரும் கண்டு தெளிதற்காகவும் உடம்படுதற்காகவும் பெருமானே! நின் பெருமைக்குத்தக அந்தணர் காண்கின்ற வெளிப்பாடு அதுவே. ஊனக் கண்ணுடையவர்களுக்குத் திருமேனிகளிலும், அந்தணர்களுக்கு வேள்வி நெருப்பிலும், யோகிகளுக்கு உள்ளத்திலும் ஞானிகளுக்கு எவ்விடத்திலும் பெருமான் வெளிப்படுகிறான். ஆதலின், யாகாக்கினி மூலம் சுடர் வளப்பாடு கொள்ளுதலைத் திருமாலுக்கு 'அந்தணர் காணும் வரவு' என்றார்.

வேள்வி நெருப்பின்கண் தோன்றும் நிலையில் செயற்கரியன செய்யப் பெறுதலான் கடவுள் இல்லை என்னும் பிறரும் 'உடம்படுவாராவர்' என்று கூறியுள்ளார்.

பரிபாடலில் கூறியுள்ள இந்த கருத்துகளைக் கீழ்வரும் மந்திரங்களும் அறிவுறுத்தும்.

'யஜ்ஞ:' என்பது ஞானயஜ்ஞம் முதலிய வேள்வியாக, வேள்வித்தீயாக, தெய்வ வழிபாடாக, ஸாத்வீகமான தானமாக இருப்பவர். 'யஜ்ஞபதி' வேள்வியைக் காப்பவர். அக்னிஹோத்ரம், தர்சபூர்ணமாஸ்யம், சாதுர்மாஸ்யம், பசுபந்தம், ஸோமயாகம் என்ற படிப்படியான வேள்விகளைக் காப்பவர். வேள்விகளில் தரப்பெறும் வறவிள்ளை ஏற்பவர்.

***'அஹம் ஹி ஸர்வ யஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச'*** (கீதை 9:24) தன்னைக் குறித்துச் செய்யப் பெறுகிற வேள்வியின் பயனைத் தருபவர்.

'யஜ்ஞாங்க' - வேள்வி வடிவானவர். யாகவடிவில் உள்ள பகவானின் உடலமைப்பாக யாகத்தின் பல செயல் முறைகளும், சாதனங்களும் மந்திரங்களும் அமைந்தன என்று ஹரிவம்சம் கூறும். வராக மூர்த்தியின் உடல் முழுவதும் வேள்வியின் அங்கங்களால் அமைந்தது என பாகவதம் (3:13: 35-39) கூறும்.

விஷ்ணு ஸகஸ்ரநாமத்தில் 971வது 'யஜ்ஞ' என்ற நாமம் தொடங்கி, யஜ்ஞபதி, யஜ்வா, யஜ்ஞாங்க, யஜ்ஞவாஹந, யஜ்ஞப்ருத், யஜ்ஞக்ருத், யஜ்ஞீ, யஜ்ஞபுக், யஜ்ஞ ஸாதந, யஜ்ஞாந்தக்ருத், யஜ்ஞகுஹ்யம்'' 982 வரை உள்ள 12 திருநாமங்களும் வேள்வி பகவானை வழிபடுவதற்கு ஏற்பட்டது. முதலில் பகவானே செய்து காட்டினார். ஹோமத்தீ, ஹோமசாலை, வேள்வி புரிபவர், அவரது கைகள், கைகளில் உள்ள ஸ்ருக், ஸ்ருவம் என்ற கருவிகள், அதில் உள்ள நெய், அன்னம், அதனை நெருப்பில் இடுதல், அதனால் ஏற்படும் பயன், இத்தனையும் பகவானே என்பதைத் தெளிவிக்கின்றன.

எனவே, வேள்வியே இறைவனை வெளிப்படுத்திக் காணக் கொண்ட வாயிலாகும்.

எம்பெருமானே!

தேவர்களுக்குணவாகிய அமிர்தத்தைக் கடைந்து கொடுப்பதாக உன் மனத்தின் கண் நிறைந்த அளவிலே தேவர்களுக்கு அதன் பயனாகிய முதுமையில்லாத மரபும், தொலையாத வளமையும், சாவாமையும் ஆகியவை சேர்ந்துவிட்டன. நினைத்தன நினைப்பின்

அமைவான் ஆக்குகின்ற உனக்குச் செயல் என்று துணிந்து வேண்டுவதில்லையே. அப்படிப்பட்ட உயர்ந்த மரபினையுடைய பெருமானே!

நின்னுடைய திருவடியை யாங்களும் தலைநிலத்தில் பொருந்த பலமுறை அசைவில்லாத தடம்மாறாத நெஞ்சத்தோடு வணங்கி வாழ்த்தி வேண்டிக்கொள்கிறோம். சுற்றத்தோடும் பலமுறை உன்புகழ்களைச் சொல்லி வேண்டுகிறோம்.

எம்பெருமானே! யாம் வேண்டுகின்ற பொருள் எது தெரியுமா? எம் அறிவு இன்று உன்னை அறிந்து பரவுதல் போல என்றும் பரவ வேண்டும். தோத்திரம் செய்ய வேண்டும். வழக்கழிவு எனப்படும் கொடும்பாடாகிய கடவுள் இல்லை என்பார் சொல்லை அறியா தொழிக என்று வேண்டுகிறோம். மெய்யுணர்வே எங்களுக்கு என்றும் வாய்க்குமாக இரண்டாம் பாடலின் பிரார்த்தனை 'கொடும்பாடு அறியற்க' எம்மறிவு என முடிகிறது. இறைவனாற் பெறுகின்ற பயன்கள் எல்லாவற்றிலும் இறைவனைப் பெறுகின்ற பயனே சிறந்தது என்பதை அது நமக்கு எடுத்துக் காட்டுகிறது. நம் அறிவில் 'கொடும்பாடு' புக இடம் கொடுத்துவிடக்கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அது வற்புறுத்துகிறது.

(கொடும்பாடு-வழக்கழிவு - உலகவழக்கிற்கு மாறுபட்ட அறிவு. அதாவது 'உலகத்தார் உண்டு என்பது இல் என்பான் வையத்து அலகையா வைக்கப்படும்' என்ற திருக்குறளில் கூறப்பெறுவதே.)

இரண்டாம் பாடலின் இறுதிப் பகுதி

*'நின்னது, திகழ் ஒளி, சிறப்பு இருள் திருமணி,*
*கண்ணே, புகழ்சால் தாமரை அலர் இணைப் பிணையல்*
*வாய்மை, வயங்கிய வைகல், சிறந்த*
*நோன்மை, நாடின் இருநிலம், யாவர்க்கும்*
*சாயல், நினது வான்நிறை என்னும்*
*நாவல் அந்தணர் அருமறைப் பொருளே*
*அவ்வும் பிறவும் ஒத்தனை உவ்வும்*
*எவ்வயினோயும் நீயே*

*செவ்வாய் உவணத்து உயர்கொடியோயே*
*கேள்வியுள் கிளந்த ஆசான் உரையும்*
*படிநிலை வேள்வியுள் பற்றி ஆடுகொளலும்*
*புகழ் இயைந்து இசைமறை உறுகனல் முறைமுட்டித்*
*திகழ் ஒளி ஒண்சுடர் வளப்பாடு கொளலும்*
*நின் உருபுடன் உண்டி*
*பிறர் உடம்படுவாரா*
*நின்னொடு புரைய*
*அந்தணர் காணும் வரவு*
*வாயடை அமிர்தம் நின் மனத்தகத்து அடைத்தர*
*மூவா மரபும் ஓவா நோன்மையும்*
*சாவாமரபின் அமரர்க்காகச் சென்றநின்...*
*மரபினோய் நின்னடி*
*தலைஉற வணங்கினோம் பன்மாண் யாமும்*
*கலியில் நெஞ்சினேம் ஏத்தினேம் வாழ்த்தினேம்*
*கடும்பொடும் கடும்பொடும் பரவுதும்*
*கொடும்பாடு அறியற்க எம்மறிவெனவே*

(பரிபாடல் 52-76 வரை)

(குறிப்பு : வான்நிறை = நிறைவான் என மாற்றிப் பொருள் செய்க. 'நா - வல் - அந்தணர், உவணம் - கருடன். கேள்வி - வேதம் ஆடுகொளல் - வேள்விப் பசுவைப் பற்றிக்கொள்ளுதல் - சுடர் வளப்பாடு கொளல் - யாகத்தீ மேல் எழும்பச் செய்தல் - உடம்படுவாரா - சம்மதிக்கும்படி, வாய்அடை - உணவு. கவி-செருக்கு, கடும்பு-சுற்றம்)

இப்பாட்டின் பொருள் நலம் : கடவுள் வாழ்த்து

ஆசிரியர் - கீரந்தையார்

இசைவகுப்பு - நன்னாகனார்

இசை - பண்ணுப் பாலையாழ்

பரிபாடலின் இரண்டாம் பாடல் நிறைந்தது.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 18

வ்ரஜத்தில் வாழ்ந்த லாலாபாபு என்ற மஹாத்மாவின் பூர்வாசிரம பெயர் க்ருஷ்ணசந்த்ரசின்ஹா. இவர் 1775-ஆம் ஆண்டு ஒரு பெரிய செல்வந்தர் வீட்டில் பிறந்தார். இவருடைய தாத்தாவான கங்காகோவிந்தசின்ஹா வங்காள, பீஹார் மாநிலங்களுக்கு கவர்னராக இருந்தார். அந்த சமயத்தில் வாரன்ஹேஸ்டிங்ஸ் இந்தியாவின் கவர்னர்ஜெனரலாக இருந்தார். தனது அபார திறமையினால் பெரும் தனத்தை ஈட்டி மிகப்பெரிய எஸ்டேட்டுக்கு முதலாளியாக கோவிந்தசின்ஹா திகழ்ந்தார். அவருடைய சகோதரரும் பெரிய தனவந்தராக இருந்தார். இந்த இரு சகோதரர்களின் பெரும் சொத்துக்கு ஒரே வாரிசாக க்ருஷ்ணசந்த்ரசின்ஹாவின் தகப்பனார் ப்ரகாஷ்க்ருஷ்ணா, இருந்தார். எனவே அவர் இந்தியாவிலேயே மிகப் பெரிய தனவந்தராக இருந்தார். அவருக்கு ஒரே மகனான க்ருஷ்ணசந்த்ரசின்ஹாவை அவர் அன்புடன் லாலா என்றழைப்பார். மற்றவர்கள் மரியாதையுடன் லாலாபாபு என்றழைக்க இந்தப் பெயரிலேயே லாலாபாபுவும் ப்ரஸித்தியானார்.

லாலாபாபு மிகவும் புத்திசாலியாக இருந்தார். வீட்டிலேயே ஆங்கிலம், ஸம்ஸ்கிருதம், பெர்சியன் போன்ற மொழிகளைக் கற்றார். குறுகிய காலத்திலேயே இந்த பாஷைகளில் பாண்டித்யத்தைப் பெற்றார். ஸ்ரீமத் பாகவதத்தை மிகுந்த ருசியுடன் படிப்பார். ஒவ்வொரு பாகவத ஸ்லோகத்துக்கும் அதிசயிக்கத் தக்கவண்ணம் அர்த்தத்தை விவரிப்பார். லாலாபாபு மிகவும் கருணை உள்ளவராகவும் ஏழைகளையும், துன்பம் உற்றவர்களையும் கண்டால் உருகும் மனத்தை உடையவராகவும் இருந்தார். ஒரு சமயம், ஒரு ஏழை மனிதன் தன்னுடைய மகளுடைய திருமணத்திற்காகப் பணம் கேட்டு லாலாபாபுவிடம் வந்தான். உடனே தன்னுடைய எஸ்டேட்டின் நிதியாளரைப் பார்த்து அவனுக்கு ஆயிரம் ரூபாய் தருமாறு பணித்தார். நிதியாளர் லாலாபாபுவின் தந்தையிடம் இதற்கு அனுமதி கேட்டார். அவர், ''லாலாபாபு ஏற்கனவே வாக்குறுதி அளித்தமையால் இந்த முறை பணத்தை தானமாகக் கொடு. ஆனால், லாலாபாபுவிடம் இனி இப்படி தருமங்களெல்லாம் செய்ய வேண்டுமென்றால் அவன்

சுயமாக பணத்தை ஸம்பாதிக்க வேண்டும், அல்லது எஸ்டேட்டின் வருமானத்தைப் பெருக்க வேண்டும் என்று சொல்லிவிடு'' என்றார்.

இதைக் கேட்டு ரோஷமடைந்த லாலாபாபு மிகவும் மனம் வருந்தினார். கோடீஸ்வரனான கங்காகோவிந்தசின்ஹாவின் பேரனுக்கு ஒரு சிறிய உதவி பிறருக்குச் செய்வதற்குக்கூட அதிகாரம் இல்லையா? சரி, இனி நான் என்னுடைய சொந்தக் கால்களில் நிற்பேன். இதுபோன்ற பேச்சுக்களைத் தவிர்ப்பேன் என உறுதி பூண்டார். அவரது பெற்றோர்களின் விருப்பத்துக்கு மாறாக வர்த்தமானாவுக்குச் சென்று அந்த ஊரின் கலெக்டர் ஆபீஸில் சரிஸ்டெதார் பதவியை (ஒரு துறையின் தலைவர்) ஏற்றார். அவரது தன்னிகரில்லாத திறமையால் கிடுகிடுவென மேலும் மேலும் பதவி உயர்வு பெற்று புகழுடன் திகழ்ந்தார். இதற்கிடையில் அவருக்குத் திருமணம் ஆகி ஒரு மகனும் பிறந்தான்.

1803-ஆம் ஆண்டு ஒரிஸா மாநிலம் பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ் வந்த சமயத்தில், அவர் ஒரிஸாவின் கவர்னராக ஆனார். அப்போது அவருக்கு பூரி நகரில் வசிக்கும் பேறு கிட்டியது. சைதன்யமஹாப்ரபுவின் லீலாஸ்தலமான பூரியில் அவருக்கு பக்திமார்க்கத்தில் ஈடுபாடு ஏற்பட்டது. தனது அலுவலக நேரம் தவிர மற்ற சமயத்தில் ஆன்மீக புத்தகங்களைப் படிப்பதிலும், நாம ஜபம், கீர்த்தனம் ஆகியவற்றிலும் பொழுதைக் கழித்தார்.

சில காலத்திற்குப் பிறகு தந்தையின் மரணச் செய்தி அவருக்குக் கிடைத்தது. அவரது மனம் துயரத்திலும் பச்சாத்தாபத்திலும் ஆழ்ந்தது. வீட்டைவிட்டு வந்த பிறகு அவர், ஒருமுறை கூட தன் தந்தையைப் பார்க்கச் செல்லவில்லை. தன் புத்திரனையும், பேரனையும் பார்க்க மிகவும் ஆவலுடன் இருந்த தந்தையின் விருப்பத்தை அவர் நிறைவேற்றவில்லை.

தனது கவர்னர் பதவியைத் துறந்தார். கல்கத்தாவுக்குச் சென்று தனது வீட்டை அடைந்தார். அங்கு எஸ்டேட்டின் நிர்வாகம் அவர் மீது விழுந்தது. அதை ஏற்று திறம்பட நடத்தினார். ஆனால், அடிக்கடி அவர் மனதில், ''இந்த எஸ்டேட்டும் செல்வங்களும் என் வாழ்க்கையின் குறிக்கோளை நிறைவேற்றுமா? அப்படி இல்லாத

பக்ஷத்தில் நிரந்தரமான நிம்மதியையும் ஆனந்தத்தையும் அளிக்கும் பக்தி மார்க்கத்துக்குச் சென்று என் இதய தெய்வங்களான ராதாக்ருஷ்ண மூர்த்திகளின் சேவை செய்வதுதானே நான் செய்ய வேண்டியது?'' என்ற கேள்விகள் அடிக்கடி எழுந்த வண்ணம் இருந்தது. ராதையும், கிருஷ்ணனும் அவரை ப்ருந்தாவனத்துக்கு அழைப்பது போன்ற தோற்றம் அவருக்கு அடிக்கடி ஏற்படும். அதே சமயத்தில் விதவைத் தாயார், அன்பு மனைவி, குழந்தைகள், பெரும் செல்வம், சுகபோகங்கள் ஆகிய அனைத்தும் அவரை மறு திசையில் பிடித்து இழுத்தன.

ஒரு மாலைப்பொழுது அவர் பல்லக்கில் உல்லாசமாகப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். முன்புறம் துப்பாக்கி ஏந்திய சிப்பாய்களும், பின்புறத்தில் அனேக காவலாளிகளுமாக சென்று கொண்டிருந்தார். பசுஞ்செடி கொடிகளும், வாஸ மலர்களும், பழங்களும் அடங்கிய மரங்களும் சூழ்ந்த சோலையில் பல்லக்கு நிறுத்தப்பட்டது. அவரது வாயில் வெள்ளி ஹுக்காவை சேவகர்கள் பொருத்தினார்கள். மெத்தென்ற வெல்வெட்டில் சாய்ந்துகொண்டும் புகைபிடித்துக்கொண்டும் வீசும் மாலைத் தென்றலை அனுபவித்துக் கொண்டும், பறவைகளின் கலகலப்பையும், கங்கையின் அலைகளின் அபார அழகையும் சுகமாக ரசித்துக்கொண்டும் இருந்தார். இயற்கையின் அழகில் மனதைப் பறிகொடுத்த அவர் தன்னைப் போல் சுகப்படுபவன் இந்த உலகில் யார் உண்டு என்று பெருமிதம் அடைந்தார்.

திடீரென்று அருகிலிருந்த ஒரு குடிசையிலிருந்து ஒரு குரல் கேட்டது. அது ஒரு மீனவனின் குடிசை. உறங்கிக் கொண்டிருந்த மீனவனை அவனது மகள், ''அப்பா எழுந்திரு! பகல் முடியப் போகிறது! சூரியன் அஸ்தமித்துக்கொண்டிருக்கிறான்!'' என்று உரத்த குரலில் எழுப்புவது அவர் செவியில் விழுந்தது. இந்த வார்த்தைகள் அவரது காதுகளில் ரீங்காரம் செய்துகொண்டே இருந்தது. அவருக்கு ப்ருந்தாவனத்திலிருந்து ராதாராணி தன்னைக் கூப்பிடுவது போல் தோன்ற ஆரம்பித்துவிட்டது. ''பாபா! எவ்வளவு நேரம் உறங்குவாய்? வாழ்க்கை முடியப் போகிறது! எழுந்திருந்து மரணம் உன்னை அடைவதற்குள் செய்ய வேண்டியதைச் செய்து முடி'' என்று

அன்புடன் ராதாராணி தன்னிடம் கூறியது போல் தோன்றியது. இந்தக் குரல் மின்சாரத்தைப் போல் அவரைத் தாக்கியது. வாயிலிருந்து புகைபிடிக்கும் குழாய் நழுவி விழுந்தது. அவருள்ளே பெரிய மாற்றம் ஏற்பட்டது. தன்னைப் போன்று ஆனந்தமாக யார் இருக்கிறார்கள் என்ற பெருமிதம் மறைந்து, மரணம்தான் தான் அனுபவிக்கும் சுகபோகங்களைவிட உண்மையான சக்தி என்றும் மரணமடைந்ததும், தான் அனுபவிக்கும் சுகங்கள் எல்லாம் தான் புகைக்கும் குழாயிலிருந்து வரும் புகை எப்படி வெறுமையில் மறைகிறதோ அப்படி அர்த்தமற்றுப் போய்விடுமே என்றும் பயமடைந்தார். அந்த மீனவப் பெண்ணின் குரல், உறங்கிக் கொண்டிருந்த அவரது மனத்தை எழுப்பியது. அன்றிலிருந்து அவர் தூக்கத்தைத் தவிர்க்க வேண்டும் என முடிவெடுத்தார். ப்ருந்தாவனம் சென்று ராதைக்கும், க்ருஷ்ணனுக்கும் சேவை செய்ய வேண்டும் என உறுதி பூண்டார்.

இந்த முடிவுடன் தன் மாளிகையை அடைந்த அவர் இரவு முழுவதும் ராதாராணியை நினைத்து அழுது ப்ரார்த்தித்தார். ''ராதே! உன் அழைப்பை ஏற்று நடக்க எனக்குத் தைரியத்தைக் கொடு'' என வேண்டினர். தன் தாயார், மனைவி மக்களிடம், ''ராதாதேவி என்னை அழைக்கிறாள். நான் ப்ருந்தாவனம் செல்கிறேன்'' என்று கூறினார். அவர்கள் பெருங்குரலில் அழ ஆரம்பித்தனர். உறவினர்களும், நண்பர்களும் தங்களாலியன்றவரை அவரது உறுதியைத் தகர்க்க முயற்சி செய்தனர். ஆனால் லாலாபாபு எந்த அழுகைக்கும், அறிவுரைக்கும் மசியவில்லை. ப்ருந்தாவனத்திற்குக் கிளம்பி விட்டார்! ராதா ராணியின் ப்ரதேசத்திற்குச் செல்லும் ஆர்வம் அப்படி ஓங்கி இருந்ததால் அவருக்கு மற்றெதும் மனதில் பதியவில்லை.

ப்ருந்தாவனத்தை அடைந்த அவர் ஏகாந்தத்தில் தனியாக வாழ ஆரம்பித்தார். காலையிலிருந்து மாலைவரை பஜனையிலேயே கழித்தார். மாலையில் வெளியே சென்று மதுகரி வ்ருத்தி செய்து என்ன கிடைத்ததோ அதைப் பெற்று உண்டார்.

ப்ருந்தாவனத்திலிருந்த சிதிலமடைந்த பல கோவில்களைப் பார்த்து அவர் மனதில் பெரும் துயரம் ஏற்பட்டது. இதற்கு ஏதாவது

செய்ய வேண்டும் என்று தோன்றியது. ஆனால், தான் அனைத்தையும் துறந்து பிச்சைக்காரனாக நிற்கிறோம். நாம் என்ன செய்ய முடியும்? என்றும் நினைத்தார். அதே சமயம் ''நான்தான் பிச்சைக்காரன். என்னுடைய ஸ்வாமியான கண்ணனுக்கு நான் கல்கத்தாவில் விட்டுவிட்டு வந்துள்ள பெரும் தனம் சொந்தமாயிற்றே! மனைவி மக்களுக்கு அவர்களுக்குரிய பங்கைக் கொடுத்துவிட்டு மீதமுள்ளதை எடுத்து வந்து ஸ்வாமியின் சேவைக்காக செலவழிப்பேன். நான் மட்டும் பிச்சை எடுத்து வாழ்வேன்'' என்று நிச்சயித்தார்.

உடனே தனது திட்டத்தை நிறைவேற்றும் ஏற்பாடுகளைச் செய்தார். அவருடைய ஜமீனிலிருந்து அவரது பங்காக இருபத்து ஐந்து லக்ஷம் ரூபாயைப் பெற்றார். 19-ஆம் நூற்றாண்டில் இந்தப் பணத்தின் மதிப்பு என்னவாயிருக்கும் என்று நாமே உணர்ந்து கொள்ளலாம்! இந்தப் பணத்தைக் கொண்டு ப்ருந்தாவனத்தில் நிறைய நில புலன்களை வாங்கினார். 75 கிராமங்கள் கொண்ட பூமியை வாங்கிவிட்டார். இந்த நிலத்திலிருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டு பல பழைய கோயில்களை செப்பனிட்டார். புதிய ஆலயங்களை நிர்மாணித்தார். பல சத்திரங்களைக் கட்டினார். கோவிலில் தெய்வங்களுக்கு நித்யபூஜைக்கு வேண்டிய வைப்புநிதியை ஏற்படுத்தினார்.

இத்தனைக்கும் மேல் ராதாக்ருஷ்ணனுக்கு ஒரு அழகான பிரும்மாண்டமான கோவிலைக் கட்ட நிச்சயித்தார். அந்தக் கோயிலில் தினமும் நூற்றுக்கணக்கான சாதுக்களுக்கு அன்னதானம் செய்ய வேண்டும் என விரும்பினார்.

கோவில் நிர்மாணம் தொடங்கியது. லாலாபாபு அடிக்கடி ராஜஸ்தான் சென்று உயர்ந்த ரக சலவைக்கல்களை கோவிலுக்கு வாங்கி வருவார். இப்படிப் போகும்போதும் வரும்போதும் பரத்பூரில் ஓரிருநாட்கள் பரத்பூர் மஹாராஜா உடன் தங்குவார். பரத்பூர் ராஜா அவருடைய பூர்வீக நண்பர். இப்படி ராஜாவுடன் பழகியதால் அவருக்கு ஒரு பெரிய ஆபத்து ஏற்பட்டது.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 98

*தூய்மன மொழியர் தோயுமுன் மெய்யகந்*
*தோயவே அருளென் அருணாசலா* - தொடர்ச்சி

ஒருவருக்கு கையில் கட்டி வந்து விடுகிறது. அது வலிக்கவில்லை. வலிக்காத போதிலும், அவர் மருத்துவரிடம் செல்கிறார். இந்த கட்டியை என்னவென்று பரிசோதிக்கச் சொல்கிறார். எதனால் அவர் மருத்துவரிடம் செல்கிறார்? கட்டியில்லாதிருப்பதே யதார்த்தமான (இயல்பான) நிலை. கட்டியை சிகிச்சை செய்து கையை பழையபடி யதார்த்த நிலைக்குக் கொண்டு வந்துவிடுகிறார். தலைவலி வந்தால், மருத்துவரை அணுகி மருந்து உட்கொண்டு, தலைவலியைப் போக்கிக்கொள்கிறோம். ஏனெனில், தலைவலி இல்லாதிருத்தலே நமது யதார்த்த நிலை. நமது சரீர (உடம்பு) விஷயத்தில் எப்பாடுபட்டாவது யதார்த்த நிலைக்கு வந்து விடுகிறோம். அதுபோல், நாம் உண்மையில் ஆனந்தமயமான ஆத்மாவே. அதை அறியாமல் இப்பொழுது, உலக சுக, துக்கங்களில் மூழ்கி கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிறோம். மறுபடியும் நாம் நமது யதார்த்தமான ஆனந்த நிலையை அடைய வேண்டும். சரீர விஷயத்தில், மருத்துவரை அணுகி மருந்து உட்கொள்வது போல், இப்படி நமது யதார்த்த ஆனந்த நிலையை அடையவும் ஒரு முயற்சி தேவை. அந்த பிரயத்தனமே ஆத்மவிசாரம்.

ஆத்மானுபவம் ஏற்படும் வரை சரீரத்தைச் சரியாக பாதுகாத்து வைத்துக்கொள்ள வேண்டும். அதனால்தான் கிருஷ்ண பரமாத்மா பகவத்கீதையில் அதிகமாகத் தூங்காதே, தூங்காமலிராதே என்றெல்லாம் சொல்கிறார். ஆத்மானுபவம் ஸித்திக்கும் வரை, சரீரத்தின் மேல் அபிமானம் (பற்று) இல்லாமல், சரீரத்தை சரியாக பாதுகாக்க வேண்டும். உதாரணமாக, வாழை இலையில் நாம் சாப்பிடுவதாக இருந்தால், அந்த வாழை இலையை சரியாக வெட்டி, சுத்தம் செய்து, அதன் மேல் அன்னத்தை பரிமாறி, உணவு உட்கொள்கிறோம். அன்னம் சாப்பிட்ட பின், அந்த இலையை

கிழித்துப் போட்டு விடுகிறோம். அதுபோல், ஆத்மானுபவம் ஏற்படும் வரை சரீர பராமரிப்பு அவசியம் தேவை. சரீரத்தை பாதுகாப்பது சரீரத்தின் மேலுள்ள பற்றாலல்ல. சரீரத்தை பாதுகாப்பது த்யானம், ஆத்மவிசாரம் செய்வதற்குத்தான். ஒருவருக்கு எதற்காக வீடு, மனைவி, குடும்பம், தனம் என்று அமைந்துள்ளது என்றால், இவற்றினால் கிடைக்கும் அனுகூலத்தினால், இறை சாதனைகளில் ஈடுபட வேண்டும் என்பதற்காகவே. ஒருவர் உலகில் அனைத்து சௌகரியமும் கிடைத்தும், ஆன்மிக சாதனைகளில் ஈடுபடாமல் இருந்தால், இறைவன் எதற்காக இந்த சௌகரியங்களைக் கொடுத்தானோ, அதை அவர் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றே அர்த்தம்.

நாம் ஆத்மாவே என்பதை நாம் அறியத் தடையாக இருப்பது மனது. இந்த மனதை விலக்கிக்கொள்வதே ஞானம். இந்த ஞானமோ, நமக்குள் என்றும் சித்தமாய் உள்ளது. அதனால்தான் 'தத்வமஸி' - என்கின்றனர். 'நீ அதுவாகத்தான் இருக்கிறாய்' என்று பொருள். என்றும் சித்தமாயிருக்கும் இந்த ஞானம் ஏற்படும்பொழுது சொரூபத்தில் (உருவத்தில்) யாதொரு மாற்றமும் இருக்காது. அதனால்தான் குருநாதர் சிஷ்யனைப் பார்த்து; ''நீ ஆத்மவஸ்துவே. உன்னுள் பேரானந்தம் உள்ளது'' என்று காட்டிக்கொடுக்கிறார். குருநாதர் காட்டிக்கொடுக்கும் பாதையில் நின்று, சாதனைகள் பயின்று, சொரூபத்தை சாக்ஷாத்காரம் செய்வதே ஞானம்.

உயர்ந்த அத்வைத நிலையை அடைந்த மஹான்கள் ''நானே ப்ரும்மா, நானே சிவன், நானே விஷ்ணு'' என்றெல்லாம் கூட சொல்கின்றனர். தெய்வமாகிவிட்டேன் என்று சொன்னாலும் கூட, ஒருநாளும் அவர்கள் 'நானே குரு' என்று சொல்வது இல்லை. இந்த ஞானம் அவர்களுக்கு குருவிடம் இருப்பதில்லை. அதற்குக் காரணம், தனக்கு ஞானத்தை காட்டிக்கொடுத்த குருநாதரிடம் அப்படி அவர்கள் விசுவாசமாய் இருப்பதே.

தூய்மனமொழியர் - சாதுக்களின் சரித்திரங்களை படித்துப் பார்த்தால், அவர்களின் குணங்கள் எப்படி இருக்கும் என்பது தெரிந்துவிடும். ரமண மஹரிஷிகளின் சரித்திரம், பெரிய பெரியவர்களின் சரித்திரம், ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சரித்திரம் போன்றவற்றைப் படித்துப் பார்க்க வேண்டும். அவர்களுக்கு என்ன

லக்ஷணங்கள் இருந்தனவோ, அவையே உண்மையான மஹாத்மாக்களின் லக்ஷணங்கள் (அடையாளங்கள்). அவர்களின் சரித்திரங்களை படிக்கும்பொழுது, அவர்களின் பெருமை புரியவரும். அப்பேர்ப்பட்ட மஹாத்மாக்களை த்யானம் செய்தால் நாமும் அப்படி ஆகிவிடுவோம். இதற்கு உதாரணமாய் உபநிஷத்தில் ஒரு கதை வருகிறது.

ராஜாக்கள் பட்டின ப்ரவேசம் செய்வது என்பது பழக்கம். அப்படி ஒரு தேசத்து ராஜா பட்டிணப்ரவேசம் செய்தான். அதுசமயம், அந்நாட்டைச் சேர்ந்த ஒரு சந்தனக்கட்டை வியாபாரியை பார்த்தான். அவனுக்கும் ராஜாவுக்கும் முன் பின் பரிச்சயமில்லை. இருப்பினும், அந்த வியாபாரியைப் பார்த்தவுடன் ராஜாவிற்கு அடங்காத கோபமும், எரிச்சலும் ஏற்பட்டது. அவனை ஒழித்துக் கட்ட வேண்டும் என்றும் அவனுக்குத் தோன்றியது. ராஜாவுக்கு இது விசித்திரமாய் இருந்தது. 'முன் பின் தெரியாத ஒரு மனிதனிடம் நமக்கு ஏன் இத்தனை கோபம் வருகிறது' என்று ஆலோசித்த மன்னன், தனது அருகில் இருந்த மந்திரியை அழைத்து, தன் மனதில் இப்படி கோபம் எழுவதற்குக் காரணம் என்ன என்று கேட்டான். மந்திரி சற்று யோசித்துவிட்டு ராஜாவிடம், ''நீங்கள் ஒரு 15 நாட்கள் பட்டினப்ரவேசம் செய்யாதிருங்கள். பிறகு செய்யலாம்'' என்றார். ராஜாவும் அதற்கு இசைந்தான்.

15 நாட்கள் கழித்து மீண்டும் பட்டினப்ரவேசம் செய்தான். இம்முறையும் அந்த சந்தனைக்கட்டை வியாபாரியைப் பார்த்தான் ராஜா. ஆனால், இப்பொழுது அவனைக் கண்டவுடன் ராஜாவிற்கு ஒரு விசேஷ ப்ரியமும், சந்தோஷமும் ஏற்பட்டது. இம்முறை அவன் நன்றாக இருக்க வேண்டும் என்னும் எண்ணமும் எழந்தது. உடன் ராஜா, மந்திரியை அழைத்துக் கேட்டான். ''என்ன! ஏதாவது மந்திரம் செய்தாயா? அதிசயமாக இன்று அவனைப் பார்த்தவுடன் எனக்கு சந்தோஷம் ஏற்படுகிறது'' என்றான்.

மந்திரி சொன்னார், ''மந்திரம் எதுவுமில்லை. அவன் ஒரு சந்தனைக்கட்டை வியாபாரி. அவன் கடைக்குச் சென்றிருந்தேன். அவனிடமிருந்த கட்டைகள் விற்கவே இல்லை. என்ன விஷயம் என்று கேட்டேன். விலை மலிவாக உள்ளது என்று நிறைய கட்டைகளை வாங்கி வைத்துள்ளான். அவனிடம் யாரோ சொல்லி

இருக்கிறார்கள், இந்நாட்டு ராஜா இறந்தால் சந்தனைக்கட்டையால் எரிப்பார்கள் என்று. ராஜாவான நீங்கள் இறந்தால் தன்னிடமிருக்கும் சந்தனக்கட்டைகள் விற்றுப் போய்விடும் என்று அந்த வியாபாரிக்கு எண்ணம். அதற்காக அவன் தினமும் பிள்ளையார் கோயிலுக்குச் சென்று, இந்த ராஜா விரைவில் மரணமடைய வேண்டும் என்று வேண்டி, தேங்காய் உடைத்து வந்திருக்கிறான். உங்கள் நாசத்தையே அவன் வேண்டியதால், உங்களுக்கு அவனைப் பார்த்தவுடன் கோபம் வந்தது.

உங்களுக்கு சமீபத்தில் வந்த ஜெயந்தி விழாவின்பொழுது, ஆயுஷ்ய ஹோமங்கள் நடந்த பொழுது அவனிடமிருந்த அனைத்து சந்தனைக் கட்டைகளையும் வாங்கிவிட்டேன். மேலும் அவனிடம் சொன்னேன், இனி வருடாவருடம் உன்னிடம்தான் ராஜாவின் ஜெயந்திக்கு (பிறந்த நாளிற்கு) சந்தனக்கட்டைகள் வாங்கப்போகிறேன் என்றேன். அவனுக்கு பெரிய லாபம் என்பதால் இப்பொழுது பிள்ளையாருக்கு அவன் தினமும், ராஜா தீர்காயுசுடன் இருக்க வேண்டும் என ப்ரார்த்தித்து தேங்காய் உடைக்கிறான். உங்களின் க்ஷேமத்தில் அவனுக்கு விருப்பம் என்பதால், அவனைப் பார்த்தவுடன் உங்களுக்கு சந்தோஷம் வருகிறது'' என்றார்.

ஆக, உலகில் ப்ரேமை உள்ளவர்களே, ப்ரேமையை எதிர்பார்க்கலாம். ப்ரேமை இல்லாதவர்கள் ஒருக்காலும் அதை எதிர்பார்க்க முடியாது.

மஹாத்மாக்களின் சரித்திரங்களை படிக்கும்பொழுது மிகவும் அதிசயமாக உள்ளது. அவர்கள் உபதேசம் செய்வதன் காரணம், மக்களிடம் அவர்களுக்கு இருக்கும் கருணையும், ப்ரேமையும்தான், காரணம். அத்தகைய உயர்ந்த ஞானிகள் ஆத்மானுபவத்தைப் பற்றி மீண்டும் மீண்டும் சொல்லுவதால், அதில் ஒரு ஆசை ஏற்படுகிறது. அத்தகைய ஒரு நிலையை அடைய நாம் ஏங்குகிறோம். மற்றொன்றும் நினைவிற்கு வரும். இந்த ஆத்மாவை பார்க்கவேண்டும் என்னும் ஆசை வந்தால் வருகிறது, வராவிட்டால் போகிறது. ஆனால், நம் குருநாதர் நமக்காக பாடுபட்டு எவ்வளவு கிரந்தங்களை இயற்றி உள்ளார்? எவ்வளவு உபதேசம் செய்து உள்ளார்? அதற்காகவாவது பாடுபட்டு இந்த ஆத்மானுபவத்தை அடைய வேண்டாமா? நிச்சயம் அடைய வேண்டும்.

'தூய்மனமொழியர் தோயும்' - உத்தம மஹாத்மாக்கள் சொல்லும் உனது ப்ரும்மஸ்வரூபத்தில் திளைத்து, நீ வேறல்ல, நான் வேறு அல்ல எனும் ஸ்திதியை அடைந்து, நீயும் நானும் எப்பொழுதும் கலந்து இருக்க வேண்டும் என அருணாசலேஸ்வரரை ப்ரார்த்திக்கிறார் ரமணமஹரிஷிகள்.

(தொடரும்)

ஸ்ரீ ஹரி:

## மதுரமுரளி சந்தா

''மதுரமுரளி'' மாத இதழுக்கு புதியதாக சந்தாதாரராக விரும்புபவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

''மதுரமுரளி'', ப்ரேமிகபவனம், New No. 2, Old No. 24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 83.

சந்தா விவரம் : ஆண்டு சந்தா ரூ. 60/- தனி ப்ரதி ரூ. 5/-

ஆயுள் சந்தா ரூ. 1000/- வெளிநாடு : ஆண்டு சந்தா : ரூ. 300/-

மதுரமுரளி இதழுக்கான சந்தாவை, **''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'** என்ற பெயரில் மட்டுமே M.O. or DD. ஆக அனுப்பவேண்டும். தயவுசெய்து காசோலையாக அனுப்ப வேண்டாம். மணி ஆர்டரில் பணம் அனுப்பும்பொழுது, பெயர், முகவரி, மதுரமுரளி சந்தா எண் முதலியவற்றை (for Renewal) முதலியவற்றை "Space for Communication"ல் கட்டாயம் எழுத வேண்டும்.

மதுரமுரளிக்கான சந்தாவை புதுப்பிப்பவர்கள் (Renewal) சந்தா எண்ணை குறிப்பிட்டு Subscription Renewal என்று எழுதி அனுப்ப வேண்டும். சந்தா எண் இல்லாமல் வரும் சந்தா தொகையானது அவர்கள் பெயரில் எடுத்துக்கொள்ள இயலாது.

சந்தாதாரரின் முகவரியில் மாறுதல் ஏற்படும்பொழுது அதை அந்த மாதத்தின் 15-ந் தேதிக்குள் எழுதி அனுப்ப வேண்டும். 15-ந் தேதிக்கு மேல் வரும் முகவரி மாற்றத்தை அடுத்த மாதத்தில் தான் செயல்படுத்த முடியும். மாதத்தின் 2-ந் தேதிக்குப் பிறகு வரும் புதிய சந்தாதாரர்களுக்கு அடுத்த மாதம் முதல் தான் மதுரமுரளி அனுப்பமுடியும்.

Email-ல் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :
contact@madhuramurali.org

# செய்திகள்

### செப்டம்பர் 21- அம்பத்தூர் விஜயம்

அம்பத்தூரில் பிரதிமாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை அன்று அகண்டமாக ராம நாம ஜபம் செய்து வருகின்றார்கள். அதோடு மட்டும் இல்லாமல் பிரதிவருடமும் பகவந்நாம போதேந்திராளுடைய வருஷ ஆராதனையையும் நடத்தி வருகின்றார்கள். இந்த வருடம் ஆராதனையை ஒட்டி செப்டம்பர் 21-ந் தேதி அன்று ஸ்ரீ ஸ்வாமிஜி அங்கு விஜயம் செய்தார்கள். வீதியின் ஆரம்பத்திலிருந்தே நிறைய குழந்தைகள் மஹாமந்திரம் எழுதிய தட்டினை கையில் வைத்துக் கொண்டும், மஹாமந்திரத்தைச் சொல்லிக்கொண்டும், மலர்களைத் தூவியும் ஸ்ரீ ஸ்வாமிஜியை வரவேற்றார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி, அன்று நாம பிரபாவத்தைப் பற்றியும், பகவந்நாம போதேந்திராளின் சரித்திரத்தையும் உபந்யாஸம் செய்தார்கள். நல்ல கூட்டம் கூடியிருந்தது. எல்லோருக்கும் அனுக்கிரஹம் செய்துவிட்டு அங்கிருந்து கிளம்பி ஸ்ரீ பரசுராம கனபாடிகளுடைய இல்லத்திற்குச் சென்றார்கள். அவர் தள்ளாத வயதிலும் வேத வித்யையை அழியாமல் காக்க வேண்டும் என்ற ஆசையால் தன் வீட்டிலேயே குழந்தைகளை வைத்துக்கொண்டு சுக்லயஜுர் வேத பாடசாலை நடத்தி வருகின்றார். அவர் ஜனாதிபதி அவார்டு வாங்கியவர். ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு அவருடைய இல்லத்திற்கு விஜயம் செய்தது மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்தது. அவருக்கு சால்வை அணிவித்து ஸ்ரீ ஸ்ரீஸ்வாமிஜி மிகவும் சந்தோஷப்பட்டார்கள். அங்கிருந்து கிளம்பி ''ஆனந்தம்'' என்ற முதியோர் இல்லத்திற்கு விஜயம் செய்தார்கள். அங்கு தங்கி இருப்பவர்களுக்காக ''சபரி மோக்ஷம்'' உபந்யாஸம் செய்தார்கள்.

### செப்டம்பர் 24, 25 தேதிகள் - மருத்துவக்குடி ஸாமவேத பாடசாலை துவக்கம்— "Dr. G.S. கல்யாணசுந்தரம் மெடிக்கல் சென்டர்'' துவக்கம்

அநேக தர்ம கார்யங்களை செய்து வரும் ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்களின் ஜனன க்ருஹத்தில் (மருத்துவகுடியில்) செப்டம்பர் 24-ந் தேதி அன்று, ''ஸ்ரீ சாரதாம்பாள் ஸாமவேத பாடசாலையை'' ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்கள் முன்னிலையில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி துவக்கி வைத்தார்கள். அப்பொழுது நம்முடைய வேதபாடசாலையின்

முதல்வர் ஸ்ரீ மல்லிகார்ஜுன ஸோமயாஜி அவர்கள் தொகுத்த க்ருஷ்ண யஜுர்வேத வர்ணக்ரமத்திற்கான 'வேதலக்ஷண வைஜயந்தி' என்ற நூலின் முதல் பிரதியை ஸ்ரீ ஸ்வாமிஜி வெளியிட ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்கள் பெற்றுக்கொண்டார். மறுநாள் பழைய கூடலூரில் நடந்த "Dr. G.S. கல்யாணசுந்தரம் மெடிக்கல் சென்டர்'' திறப்பு விழாவில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள்.

**செப்டம்பர் 26-ந் தேதி முதல் அக்டோபர் 4-ந் தேதி வரை — நவராத்ரி உத்ஸவம்**

மதுரபுரி ஆஸ்ரமத்தில் நவராத்ரி உத்ஸவம் கொண்டாடப்பட்டது. தினமும் காலை மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு பூஜையும், ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் நடைபெற்றது. பூஜை முடிந்து ஸ்ரீ ஸ்வாமிஜி எல்லோருக்கும் தீர்த்தப்ரஸாதம் வழங்கினார்கள். மாலையில் தினமும் பிரபல வித்வான்களின் ஸங்கீத கச்சேரியும், இரவில் ராதிகாசதகம் கீர்த்தனமும் நடைபெற்றது.

செப்டம்பர் 28-ந் தேதியன்று மாலை 4 மணியளவில் பப்பா ராமதாஸ் அவர்களின் ஆனந்தாஸ்ரமத்தைச் சேர்ந்த அன்பர்கள் முன்னிலையில் மாதா க்ருஷ்ணாபாய் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தபால்தலையை வெளியிட்டு ஸ்ரீ ஸ்வாமிஜி அருளுரை நிகழ்த்தினார்கள்.

செப்டம்பர் 29, 30, அக்டோபர், 1 தேதிகளில் ஸ்ரீ ஸ்வாமிநாத ஆத்ரேயர் அவர்களின் ஸத்ஸங்கம் நடைபெற்றது, ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் க்ருதிகளை அனுபவித்து விளக்கம் சொன்னது மிகவும் ரஸமாக இருந்தது.

அக்டோபர் 1-ந் தேதி மாலை 6 மணிக்கு சௌ. ஸம்பதாஹிராய் அவர்களின் அபங்க பஜனை ஒலிநாடா வெளியிடப்பட்டது. தொடர்ந்து அவர்களுடைய அபங்க பஜனை நடைபெற்றது. அக்டோபர் 2-ந் தேதியன்று ஸ்ரீதேவி ந்ருத்யாலயா வித்யார்த்திகளின் ''பால ராமாயணம்'' பரத நாட்டியம் நடைபெற்றது.

அக்டோபர் 3-ந் தேதியன்று மாதுரிஸகி ஸமேத ஸ்ரீ ப்ரேமிக வரதனின் ஜானவாஸமும் பூர்த்தி நாளன்று ''சீதா கல்யாணமும்'' நடைபெற்றது.

### செப்டம்பர் 28-ந் தேதி

ஆம்பூர், ஆன்மீகப் பேரவை சார்பில், அருள்மிகு சீனிவாசப்பெருமாள் திருக்கோயிலில், காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை அகண்ட ''ஹரே ராம...'' மஹாமந்திர நாமகீர்த்தனத்தில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா குழுவினர் பங்குகொண்டார்கள்.

### அக்டோபர் 5-ம் தேதி - புரட்டாசி ச்ரவணம் - ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாள் அவதார உத்ஸவம்

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸபெருமாளின் அவதார உத்ஸவம் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமிஜி ச்ரவணதீபம் ஏற்றினார்கள். மதியம் அஷ்டபதி பஜனையும் மாலையில் திவ்ய நாமகீர்த்தனமும் நடைபெற்றது.

### அக்டோபர் 11-ந் தேதி, 12-ந் தேதி

கல்பாக்கம், புதுப்பட்டினம், வரஸித்தி விநாயகர் திருக்கோயிலில் நடைபெற்ற ராதாகல்யாண மஹோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள்.

### அக்டோபர் 13-ந் தேதி முதல் 19-ந் தேதி வரை

கொச்சி ஸ்ரீ சேதுராமன் அவர்கள் க்ருஹத்தில் நடைபெற்ற ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ பாராயணத்தில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள்.

### அக்டோபர் 26-ந் தேதி

மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீ ஸ்ரீஸ்வாமிஜியின் ஜயந்தி மஹோத்ஸவம் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

---

*Humble Pranams to the Lotus Feet of Sri Sri Swamiji*

Wanted Land for Joint Venture

Construction of Houses and flats are also undertaken

**USHA & Co.**

*Builders & Promoters*

**S. MURUGAIYAN**

✆ : 23728440, Cell : 31050575

# பக்தர்களின் கவனத்திற்கு!

நமது **மதுரபுரி ஆஸ்ரம வளாகத்திற்குள்** தியானகூடமோ, தெய்வ பிரதிஷ்டையோ, அதிஷ்டானமோ எதுவும் கிடையாது. ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, ஆஸ்ரமத்தில் தங்கியிருக்கும் காலங்களில், **மாதுரிஸகி ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனுக்கு பூஜையும் ஸத்ஸங்கமும்** நடைபெறும். ஆஸ்ரம வளாகத்திற்குள் **யஜுர், ஸாம வேதபாடசாலை** நடந்து வருகின்றது. சுமார் அறுபது வித்யார்த்திகள் வேதம் பயின்று வருகிறார்கள். ஆஸ்ரமத்தில், கைங்கர்யம் செய்து வருபவர்களும் அவர்களுடன் தங்கியுள்ளார்கள். வேதம் பயிலும் மாணவர்களுக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்ற நல்லெண்ணத்தில், **ஸ்ரீ ஸ்வாமிஜி ஆஸ்ரமத்தில் தங்கியிருக்கும்பொழுது மட்டுமே பக்தர்கள் காலை 9 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 6 மணி வரையிலும்** தரிசனத்திற்கு ஆஸ்ரமத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

ஆஸ்ரம வளாகத்திற்கு பக்கத்திலேயே ஸ்ரீ ஸ்வாமிஜியால் **ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள் ஆலயம்** நிர்மாணிக்கப்பட்டு நித்ய ஆராதனைகள் நடந்து வருகின்றது. தினமும், **காலை 6.30 மணி முதல் 11.30 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் 8 மணி வரையிலும்** கோவில் திறந்திருக்கும். பக்தர்கள் இந்த நேரத்திற்குள் எப்பொழுதும் பெருமாளை ஸேவிக்கலாம்.

சென்னை K.K. நகரில் (ஜாபர்கான்பேட்டை) பிரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி இருக்கும் சமயத்தில் அவரை **காலை 8 மணி முதல் 10 மணி வரையிலும் மாலை 5.30 மணி முதல் 8.30 மணி வரையிலும்** தரிசனம் செய்யலாம். ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்யும்பொழுது அவரிடமிருந்து **பகவந்நாம உபதேசம்** பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு மாதமும் **மதுரமுரளி** இதழில் ஸ்ரீ ஸ்வாமிஜி, அந்த மாதத்தில் எங்கு இருப்பார் என்ற விவரம் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டுவிடும். இதைத்தவிர, மற்ற நேரங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்யவேண்டும் என்றால் **முன் அனுமதி** பெற்றுக்கொண்டு தரிசிக்கலாம்.

கடிதங்களை நமது நிர்வாக அலுவலகத்திற்கு "Personal Secretary to H.H. Sri Sri Muralidhara Swamiji" என்று அனுப்ப வேண்டும். கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி கீழே தரப்பட்டு உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜியின் உதவியாளருக்கே கடிதங்களை அனுப்ப வேண்டும். அவர் ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் தெரிவிக்க வேண்டிய செய்திகளைத் தெரிவிப்பார். நமது மிஷனிற்கு E-mail address உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு தனிப்பட்ட E-mail address கிடையாது.

**கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :**

**"**Personal Secretary to **H.H. Sri Sri Muralidhara Swamiji"**
**Guruji Sri Muralidhara Swamigal Mission**
Premika Bhavanam,
New No.2, (Old No.24),
Netaji Nagar, Jafferkhanpet,
Chennai - 600 083.
E-mail : contact@madhuramurali.org

## அறிவிப்பு

வாலாஜாபாத் அருகில் தன்வந்திரி கோயில் கட்டுவது விஷயமாகவும், தன்வந்திரி மந்திரத்தை எழுதி அனுப்புவது விஷயமாகவும் நம்முடைய அலுவலகத்திற்கு பல கடிதங்களும் தொலைபேசி அழைப்புகளும் வருகின்றன. நம்முடைய ஸ்வாமிஜிக்கும் அதற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கின்றோம்.

டிசம்பர் 16-ந் தேதி முதல் ஜனவரி 14-ந் தேதி வரை ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலில் தினமும் காலை 4.30 மணிக்கு தனுர்மாத பூஜை நடைபெறும்.

தினசரி கட்டளை : ரூ.150/-

கோயில் தரிசன நேரம் : காலை 4.30 முதல் 9.30 வரை
மாலை 5.00 முதல் 9.00 வரை

## ஸங்கீர்த்தன ஸப்தாஹம்

இடம் : அயோத்யா அஸ்வமேத மஹாமண்டபம்,
மேற்கு மாம்பலம், சென்னை

தேதி : 23-11-2003 முதல் 29-11-2003 வரை

ஸ்ரீ ராம் ஸமாஜத்தின் பொன் விழா ஆண்டை ஒட்டியும், காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திரஸரஸ்வதி ஸ்வாமிகளின் பீடாரோஹண ஸ்வர்ண ஜயந்தியை ஒட்டியும் இந்த வருடம் முழுவதும் மேற்கு மாம்பலம், அயோத்யா அஸ்வமேத மஹாமண்டபத்தில் ஸத்ஸங்க நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகின்றன. அதன் அங்கமாக **நவம்பர் 23-ந் தேதி முதல் 29-ந் தேதி** வரை **ஸங்கீர்த்தன ஸப்தாஹம்**, ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற உள்ளது. தினமும், காலையில் மாதுரீஸகீஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு பூஜையும், ஸ்ரீமத் பாகவத மூல பாராயணமும், பாரத தேசத்தின் பல பாகங்களில் இருந்து கலந்துகொள்ள வரும் பாகவதோத்தமர்களின் நாமகீர்த்தனமும், மாலையில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாஸமும், இரவில் திவ்யநாம கீர்த்தனமும் நடைபெற உள்ளது.

## ஸ்ரீமத் பாகவத உதயாஸ்தமன ஸப்தாஹம்

பொதுவாக, ஸ்ரீமத் பாகவத மூல பாராயணம் செய்தவர்களில் பலருக்கும்கூட முழுமையாக அதன் பொருளை தெரிந்துகொள்வது என்பது சுலபமன்று. மேலும், ஸ்ரீமத் பாகவத உபன்யாஸங்களிலும், பெரும்பாலும், முக்கியமான சரித்திரங்கள் மட்டுமே விவரிக்கப்படுகின்றன. ஸ்ரீமத் பாகவத உதயாஸ்தமன ஸப்தாஹத்தில், ஸ்ரீமத் பாகவதத்தின் அனைத்துப் பகுதிகளின் பொருளையும் விஸ்தாரமாக ச்ரவணம் செய்ய ஒரு அரிய வாய்ப்பு கிடைக்கின்றது. முற்பிறவியிலே செய்த மிகப்பெரிய புண்யத்தின் காரணமாகவே இது போன்ற உதயாஸ்தமன ஸப்தாஹத்தில் கலந்துகொள்ளும் பாக்கியம் ஒருவருக்கு லபிக்கின்றது.

**மங்களானி பவந்து**